Deposition of witness
(Chapter XXIII Code of Criminal Procedure
District Munsif cum Judicial Magistrate Court, Alangudi.
CC No. 146/18

**Deposition of P.W.4**

Name : சுப்பிரமணியன்

Father's Name : பெரமன்

Village : நம்பிவயல்

Age : **65/2022**

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 28.06.2022**

<u>முதல் விசாரணை</u>

நான் நம்பிவயல் கிராமத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 ராணியையும் அ.சா.2 செல்வராஜையும் எனக்கு தெரியும். அ.சா.1 எனக்கு மகள் உறவு. அ.சா.2 செல்வராஜ் எனக்கு தம்பி உறவு. ஆஜர் 2வது எதிரியையும், வழக்கின் பிற எதிரிகளையும் எனக்கு தெரியும். கடந்த 17.06.2007 அன்று அ.சா.1 ராணிக்கும் 1வது எதிரி புண்ணியமூர்த்திக்கும் ஊரணிபுரத்தில் உள்ள அம்சவள்ளி திருமணமண்டபத்தில் வைத்து திருமணம் நடந்தது. திருமணத்திற்கு பின்னர் அ.சா.1 ராணியை 1வது எதிரி சென்னைக்கு அழைத்துச்சென்று குடும்பம் நடத்தினார். சென்னையில் வைத்து 3-4 வருடங்கள் 1வது எதிரி குடும்பம் நடத்தினார். அப்போது 1வது எதிரி அ.சா.1 ராணிக்கு சொந்தமான நகைகளையும், பொருட்களையும் வாங்கி அடகு வைத்துள்ளார். மேலும் 1வது எதிரி அ.சா.1 ராணியிடம் அவரது வீட்டிற்கு சென்று ரூ.5000/-, ரூ.10000/- பணம் வாங்கி வரசொல்லி அடிக்கடி தொல்லை செய்துள்ளார். அ.சா.1 ராணியும் 1வது எதிரி பணம் கேட்கும்போதெல்லம் அவரது வீட்டிலிருந்து வாங்கி கொடுத்துள்ளார். அதேபோன்று பலமுறை பணம்கேட்டு அ.சா.1 ராணியை 1வது எதிரி அனுப்பி உள்ளார். அதன்பின்னர் ஒருநாள் அ.சா.1 ராணி அவரது அப்பாவிடம் போன்செய்து 1வது எதிரி பணம்கேட்டு தொல்லை செய்வதாக தகவல் சொல்லியுள்ளார். அ.சா.1ன் அப்பாவான அ.சா.2 செல்வராஜ் சென்னைக்கு சென்றுள்ளார். அப்போது 1வது எதிரி வீட்டிலிருந்து எங்கேயோ சென்றுவிட்டார். அதனால் அ.சா.2 செல்வராஜ் தனியாக இருந்த தனது மகள் அ.சா.1 ராணியை ஊருக்கு அழைத்துவந்துவிட்டார். அதன்பின்னர் சில நாட்கள் கழித்து 1வது எதிரி குடிக்காடினைச்சேர்ந்த எனக்கு தெரிந்த கிருஷ்ணமூர்த்தி என்பவரது மகள் லீலா என்பவரை ஜெயலலிதா இறந்த அன்று 2வது திருமணம் செய்துள்ளார். மேற்படி தகவலை அ.சா.2 என்னிடம் சொன்னார். நானும் அ.சா.1 செல்வராசும் குடிக்காடு சென்று லீலாவின் தகப்பனார் கிருஷ்ணமூர்த்தியிடம் அதுபற்றி கேட்டோம். அதற்கு கிருஷ்ணமூர்த்தி எங்களிடம் 1வது புண்ணியமூர்த்தி தங்களை அணுகி தனக்கு அ.சா.1 ராணியுடன் நடந்த திருமணம் விவாகரத்து ஆகிவிட்டது என்று தெரிவித்து பெண்கேட்டார். நானும் 1வது எதிரி சொன்னதை நம்பி பெண்கொடுத்தேன் என்று சொன்னார். இதுசம்மந்தமாக அ.சா.1 ராணி காவல்நிலையத்தில் புகார் அளித்தாரா என்பதுபற்றி எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்தனர். நடந்த விபரம் கூறினேன்.

<u>எதிரி தரப்பில் கு.வி.</u>

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி இருந்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

Deposition of witness
(Chapter XXIII Code of Criminal Procedure
District Munsif cum Judicial Magistrate Court, Alangudi.
CC No. 146/18

**Deposition of P.W.3**

| | | |
|---|---|---|
| Name | : | தசரதன் |
| Father’s Name | : | தாமோதரன் |
| Village | : | நம்பிவயல் |
| Age | : | **45/2022** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 28.06.2022**

**முதல் விசாரணை**

நான் நம்பிவயல் கிராமத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 ராணியை எனக்கு தெரியும். எதிரிகளை எனக்கு தெரியும். சுமார் 4 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் மாலை 6.30 மணியளவில் நான் எனது மாமியார் வீட்டு வயலில் இருந்து வந்தபோது அ.சா.1 ன் அப்பா செல்வராஜ் மற்றும் ஆலங்குடி காவலர்கள் பட்டுவிடுதியில் 1 வது எதிரியின் வீட்டிற்கு அருகே நின்று கொண்டிருந்தார்கள். நான் அப்போது அ.சா.2 செல்வராஜிடம் சென்று எதற்காக போலீசார் நிற்கிறார்கள் என்று கேட்டேன். அதற்கு செல்வராஜ் என்னிடம் அ.சா.1 ன் கணவர் மன்னார்குடி அருகிலுள்ள குடிக்காடினைச் சேர்ந்த லீலா என்ற ஒரு பெண்ணை ஜெயலலிதா இறந்த அன்று திருமணம் செய்துகொண்டுள்ளார் என்றும் அதுசம்மந்தமாக போலீசார் விசாரணை செய்ய வந்திருப்பதாகவும் கூறினார். போலீசார் என்னை விசாரித்தனர். நடந்த விபரம் கூறினேன்.

**எதிரி தரப்பில் கு.வி.**

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி இருந்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.